T.C. 018

T.C. 018

020/DM/23

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
# GENERAL EDUCATIONAL TEST OF THE S.S.L.C. STANDARD
# PAPER – II – GENERAL KNOWLEDGE

(Without Books)

Maximum Time : 2.30 hours | Maximum Marks : 100

***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE
## விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.
விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

## SECTION A
## பகுதி அ

Answer any SIX questions.
எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**(6 × 4 = 24)**

1. What are the terms of poona pact?

பூனா ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?

2. Find out the year with date of the following events :

(a) The day of Bengal was officially partioned.

(b) Chauri chaura incident

(c) Arrival of Crips mission in India.

(d) Direct action day

கீழ்கண்ட நிகழ்வுகளுக்கு வருடங்களை தேதியுடன் குறிப்பிடுக.

(அ) வங்காளம் அதிகாரப்பூர்வமாக பிரிவினையான நாள்

(ஆ) சௌரி சௌரா சம்பவம்

(இ) கிரிப்ஸ் தூது குழு இந்தியா வருகை

(ஈ) நேரடி நடவடிக்கை நாள்

[Turn over

3. Mention the member Countries of BRICS.

பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயரை குறிப்பிடுக.

4. What is rust? Give the equation for formation of rust?

துரு என்பது என்ன? துரு உருவாவதன் சமன்பாட்டை தருக.

5. Write importance of Ethnobotany.

வட்டார இன தாவரவியலின் முக்கியத்துவம் எழுதுக.

6. What are the qualification for the election as President?

இந்திய குடியரசு தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள் யாவை?

7. Name the Secondary Sex organs in male.

ஆண்களின் இரண்டாம் நிலை இனப்பெருக்க உறுப்புகளை கூறுக.

8. What is colostrum? How is milk production hormonally regulated?

கொலஸ்ட்ரம் (சீம்பால்) என்றால் என்ன? பால் உற்பத்தியானது ஹார்மோன்களால் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகிறது?

## SECTION B

## பகுதி ஆ

Answer any SIX questions.
எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**(6 × 6 = 36)**

9. Describe the major challenges of Indian Industries.
இந்திய தொழிலகங்கள் எதிர் கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.

10. Write properties of light.

ஒளியின் பண்புகளை எழுதுக.

11. Discuss the causes of the revolt of 1857.

1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்.

12. Who founded the Vijayanagar Kingdom? Mention the dynasties that ruled over kingdom.

விஜய நகரப் பேரரசை உருவாக்கியது யார்? அவ்வரசை ஆண்ட வம்சாவளிகளின் பெயர்களை குறிப்பிடுக.

13. Explain the salient features of the constitution of India.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

14. Differentiate Soaps and detergents.

சோப்பு மற்றும் டிடர்ஜெண்ட்டை வேறுபடுத்துக.

15. A toy is in the shape of a cylinder surmounted by a hemisphere. The height of the toy is 25 m. Find the total surface area of the toy if its common diameter is 12 cm.

ஓர் உருளையின் மீது ஓர் அரைக்கோளம் இணைந்தவாறு உள்ள ஒரு பொம்மையின் மொத்த உயரம் 25 செ.மீ. ஆகும். அதன் விட்டம் 12 செ.மீ. எனில், பொம்மையின் மொத்த புறபரப்பைக் காண்க.

## SECTION C

## பகுதி இ

Answer any FOUR questions.

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**(4 × 10 = 40)**

16. What is AIDS? How HIV is transmitted? What are the symptoms and treatment of AIDS?

AIDS – என்றால் என்ன? HIV–எவ்வாறு பரவுகிறது? எய்ட்ஸ் நோய்க்கான அறிகுறி மற்றும் சிகிச்சை முறைகள் யாவை?

17. Explain the powers and functions of the Supreme Court.

உச்ச நீதி மன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் விவரி.

18. Evaluate the contribution of Ramakrishna Parahamsa and Swami Vivekananda to regenerate Indian Society.

இந்திய சமூகத்திற்கு இராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினை விவரி.

19. How did the people of Bengal, respond to the Partition of Bengal (1905)?

1905–ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்காள பிரிவினையின் போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்து கொண்டனர்?

20. A capsule is in the Shape of a Cylinder with two hemisphere stuck to each of its ends. If the length of the entire capsule is 12 m.m. and the diameter of the capsule is 3 m.m, How much medicine it can hold?

ஒரு மருந்து குப்பி, ஓர் உருளையின் இருபுறமும் அரைகோளம் இணைந்த வடிவில் உள்ளது. குப்பியின் மொத்த நீளம் 12 மி.மீ. மற்றும் விட்டம் 3 மி.மீ. எனில் அதில் அடைக்கப்படும் மருந்தின் கன அளவைக் காண்க.

---